**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை : திரு. **எஸ்.என். தனஞ்ஜெயன், B.B.A., B.L.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.
2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ஆம் நாள் வெள்ளிக்கிழமை
**அசல் வழக்கு எண்.108/2023**
**CNR.No. TNTM080001832023**

பானுமதி .....வாதி

/எதிர்/

விஜயகுமார் ...பிரதிவாதி

இவ்வழக்கு 22.02.2024 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.A.சான்பாஷா அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பி. சிலம்பரசன் அவர்கள் ஆஜராகி வக்காலத்து தாக்கல் செய்தும், எதிர்வழக்குரை தாக்கல செய்யாததாலும், அழைத்தும ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக கருதப்பட்டும், பின்னர் வாதியின் வாதுரை கேட்டும், சாட்சி மற்றும சான்றாவணங்களை பரிசீலனை செய்தும இன்று, இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்.

**தீர்ப்புரை**

வாதிக்கு பிரதிவாதி தாவா தொகையும், அதற்கு தாவா தாக்கலான நாள் முதல் தீர்ப்பாகும் நாள் வரை 24 % வட்டி வீதம் கொடுக்கும்படிக்கும் மற்றும் மேற்கண்ட தொகைக்கு பின்வட்டி கோரியும் வாதியால் இத்தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதியின் வழக்குரையின் சுருக்கம்:**

i) வாதியிடமிருந்து பிரதிவாதி ரூ. 50,000/-ஐ (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) கடனாக ரொக்கமாக பெற்றுக்கொண்டு அதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100/க்கு ரூ.2.00 வீதம் வட்டியுடன் சேர்ந்து திரும்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வாதிக்கோ அல்லது

வாதியின் உத்தரவு பெற்றவருக்கோ செலுத்துவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டு 25.11.2020 தேதியிட்ட தாவா பாண்டினை வாதியின் பெயருக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்துள்ளார்.

ii) மேற்படி பிரதிவாதி சிறு விவசாயி அல்ல என்றும் பிரதிவாதி நல்ல வசதியுடையவர் என்றும் மேலும் அவர் டிரைவர் வேலை செய்து போதிய வருமானம் ஈட்டி வருகிறார் என்றும், அவர் தன்னுடைய குடும்ப செலவிற்காகவும், வாகனம் வாங்குவதற்காகவும் கடன் தொகையை பெற்றிருப்பதால் கடன் நிவாரண சட்டம் அவருக்கு பொருந்தாது.

iii) வாதி மேற்படி பாண்டு பாக்கியை பைசல் செய்யும்படி பலமுறை நேரில் அணுகி கேட்டும் பிரதிவாதி மேற்படி கடனுக்காக எவ்வித தொகையும் செலுத்தவில்லை என்றும் அதனால் வாதி தன்னுடைய வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு 06.11.2023 அன்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பினார் என்றும் அதனை பிரதிவாதி 10.11.2023 தேதியில் பெற்றுக்கொண்டு அஞ்சல் ஒப்புகை அட்டையில் கையொப்பம் செய்துள்ளார் என்றும் அதன் பின்னிட்டும், மேற்படி கடனுக்காக பிரதிவாதி தொகை எதுவும் செலுத்தாததால் மேற்படி கடனை வசூலிக்க வேண்டி வாதி இந்த தாவாவினை தாக்கல் செய்கின்றார்.

3) பிரதிவாதி தரப்பில அழைத்தும ஆஜராகாத காரணத்தினால், ஒருதலைபட்சமாக்க கருதப்பட்டார்கள்.

4) வாதி தரப்பில் பானுமதி என்பவர் வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பில் வா.த.சா.ஆ.1 முதல் 2 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

5) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் யாதெனில் வாதி கோரும்

பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

**தீர்வு**

6) வாதி தரப்பில் வாதுரை கேட்கப்பட்டது. இவ்வழக்கு ஆவணம் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பில் வாதி பானுமதி என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வாதி தரப்பில் 25.11.2020 தேதியிட்ட புரோ நோட் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், பிரதிவாதி 25.11.2020அன்று ரூ.50,000/-த்தை கடனாக பெற்றுக்கொண்டு புரோநோட் எழுதிக் கொடுத்ததாகவும், மேற்படி புரோநோட் தொகைக்கு 100/-க்கு ரூ.2.00/- வீதம் வட்டி செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டார். ஆனால் பிரதிவாதி மேற்படி புரோநோட் தொகைக்கு வட்டியையோ அசலையோ செலுத்தவில்லை. இது குறித்து 06.11.2023 அன்று பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது அது வா.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பினை பிரதிவாதி 10.11.2023 அன்று பெற்றுக்கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டையில் கையொப்பமும் செய்துள்ளார் அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடன் தொகையை பிரதிவாதி பைசல் செய்யவுமில்லை. எனவே புரோநோட் கடன் பைசல் தொகையான ரூ. 50,000/-த்திற்கு ஆண்டுக்கு 24% வட்டி செலுத்த கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

7) வாதி தரப்பு ஆவணங்கள் சாட்சியங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததில் வாதியிடம் பிரதிவாதி புரோநோட் எழுதி கொடுத்து, பணம் பெற்றுக்கொண்டு திருப்பி செலுத்தவில்லை என்பதும், வாதி, பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும், அதற்கான ஒப்புகை அட்டையும் வாதி தாக்கல் செய்துள்ளதும், வாதி தரப்பில் தக்க சாட்சிகள் மற்றும் சான்றவாணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மாறாக வாதி தரப்பு வழக்குரையையோ அல்லது சான்றாவணங்களையோ மறுத்துரைத்து பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் கோரிக்கையை மறுக்க முன் வராதபட்சத்தில் வாதி கோரியுள்ள பரிகாரத்தை வழங்க பிரதிவாதிக்கு ஆட்சேபனை இல்லை என அனுமானிக்க வேண்டியுள்ளது. வாதி

மேற்படி ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் வாதி கோரியுள்ளவாறு தீர்ப்பளிக்க முதல் நோக்கு வழக்கை நிரூப்பித்துள்ளார். எனவே, வழக்கில் கோரியுள்ள பரிகாரத்தை அடைய வாதி அருகதை உடையவர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கப்படுகிறது.

8) **இறுதியாக,** வாதியின் தாவா அனுமதிக்கப்படுகிறது. தாவா தொகையான ரூ.85,833/-ம், கடனுறுதி சீட்டு தொகையான ரூ.50,000/-த்திற்கு 20.11.2023 தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 24% வட்டியும் தீர்ப்பாணை தேதியிலிருந்து செலுத்தி முடிக்கும் தேதிவரை 6% வட்டியும் பிரதிவாதி வாதிக்கு செலுத்தவேண்டும் என்றும், தாவா செலவு தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்பு என்னால் நேரடியாக தட்டச்சு சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S N DHANANJEYAN
Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.03.11 12:57:49 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**வாதி தரப்பு சாட்சிகள்:**

வா.சா.1 -பானுமதி

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. | வா.த.சா.ஆ.1 | 25.11.2020 தேதியிட்ட புரோநோட் |
| 2. | வா.த.சா.ஆ-2 | 06.11.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் |
| 3. | வா.த.சா.ஆ.3 | பிரதிவாதி அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை |

**பிரதிவாதி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்** - எதுவும் இல்லை

S N DHANANJEYAN
Digitally signed by S N DHANANJEYAN
Date: 2024.03.11 12:58:06 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

3) பிரதிவாதி தரப்பில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால், ஒருதலைபட்சமாக்க கருதப்பட்டார்கள்.

4) வாதிகள் தரப்பில் பெருமாள் என்பவர் வா.சா.1 ஆகவும், முனுசாமி என்பவர் வா.சா.2ஆகவும் விசாரிக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

5) வாதிகள் தரப்பில் வாதுரை கேட்கப்பட்டது. இவ்வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் யாதெனில் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?